குழுவின், ஊரக வளர்ச்சி குறித்த 18-வது அறிக்கையையும், கிராமக் குடிநீர் வழங்கல் தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை குறித்த 19-வது அறிக்கையையும், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தி ஒன்றாவது முதல் நூற்று எழுபத்து மூன்றாவது வரையிலான 13 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினான்காவது முதல் நூற்று முப்பத்து ஒன்றாவது வரையிலான 18 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

மேற்படி அறிக்கைகளில் 118 முதல் 131 வரையிலான 14 அறிக்கைகள் போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படி எடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன், அவை பேரவையின் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குப் பெருமை தேடித் தரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொது நிறுவனங்கள் குழுவிற்கு பெண் உறுப்பினரை முதல் தலைவியாக நியமனம் செய்து, பெண் குலத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள், எங்கள் பொன்மனத் தலைவி அம்மா அவர்கள், வரலாற்றில் சாதனை